## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

## கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C. 313 / 2019 | | காவல் நிலையம்: சிப்காட் |
|---|---|---|
| பெயர் : கோபி | அ.சா. 2 | நாள் : 11.08.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 2 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபி | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | வரதன் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | காவாங்கரை | வயது | : | 55 |

(எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர், எதிரி1 ன் வழக்கறிஞர் ஆஜராகி எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் ரெட்ஹி ல்ஸ் காவாங்கரையில் பூர்விகமாக குடியிருந்து வருகிறேன். நான் சிப்காட்டிலுள்ள அசோக் என்டர்பிரைசஸ் நிறுவனத்தில் கடந்த 35 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். எங்களுடைய கம்பெனிக்கு எதிரில் உள்ள கம்பெனியில் (கம்பெனி பெயர் தற்போது தெரியாது) மேலுள்ள இரும்பு ஆங்கிளை பிரித்து எடுத்து விட்டார்கள். அதன் காரணமாக அந்த கம்பெனியில் இருந்து சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அது சம்பந்தமாக கடந்த 2013ம் வருடம் (தேதி மாதம் ஞாபகமில்லை) காலை சுமார் 10 அல்லது 10.30 மணிக்கு சிப்காட் காவல் நிலைய போலிசார் எனது கம்பெனிக்கு வந்து விசாரித்தார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரீசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.10.2013ம் தேதி காலை 10.30 மணிக்கு சிப்காட் வளாகத்திலுள்ள தேவன் டெக்ரேட்டர்ஸ் கம்பெனியில் திருட்டு போனது சம்பந்தமாக கணேசன் என்பவர் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தார் என்றால் சரிதான். அந்த புகார் சம்பந்தமாக மேற்படி தேதியில் சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மேற்படி கம்பெனிக்கு வந்திருந்தார் என்றால் சரிதான். அங்கு என் முன்னிலையில் சம்பவ இடம்

பற்றி மாதிரி வரைபடம் வரைந்தார் என்றால் சரிதான். அந்த வரைபடம் என்னிடம் காட்டப்படுவது தான். அதே இடத்தில் பார்வை மகசரையும் உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அந்த பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். **(பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் செல்வம் என்பவரும் மேற்படி மகசரில் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். செல்வம் என்னுடன் கம்பெனியில் ஆப்ரேட்டராக பணி செய்தார் என்றால் சரிதான். இது சம்பந்தமாக மேற்படி காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னையும் செல்வத்தையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ரெட்ஹில்ஸ் காவாங்கரையில் இருந்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனக்கு மகசர் என்றால் என்னவென்று தெரியாது. நான் கையொப்பமிட்டதாக கூறும் ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு, எனது கம்பெனியில் என்னிடம் வந்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் இல்லை, எதிரில் இருந்த கம்பெனியை தான் பார்வையிட்டார்கள், பின்னர் நான் காவல் நிலையம் சென்று கையொப்பம் இட்டேன்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– கோபி

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L., Date: 2025.08.11 16:54:13 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி